1982 மார்ச் 19]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. அந்த கல்நாட்டு விழாவில் நானும் கலந்துகொண்டேன் என்று நினைக்கிறேன். எனினும் சிறப்பாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும். மற்றப் பிரச்சனைகள் பற்றி தற்போது என்னிடம் குறிப்பு இல்லை. அவர்கள் எழுதிக் கொடுத்தால், அதை பரிசீலனை செய்து முடிந்தவரை அந்தக் காரியங்களை நிறைவேற்ற இந்த அரசு தன்னால் ஆன முயற்சிகளைச் செய்யும்.

திரு. ஜே. சி. டி. பிரபாகரன் : தலைவரவர்களே அம்பத் தூர் நகரியத்திலிருந்து 7 இலட்சம் ரூபாய் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு தரப்பட்டு இன்றைக்கு மண்ணூர்பேட்டை என்கின்ற பகுதியில் ஒரு ஆழ்கிணறு தோண்டப்பட்டு, அது பாதியிலே நின்றுகொண்டிருக்கிறது. அதைப்போல அத்திப்பட்டு பகுதியிலே ஒரு கிணறு தோண்டப்பட்டு, வேலை முடிந்து, இன்னும் மின் இணைப்புத் தரப்படாமல் இருக்கிறது. அதற்கு மின் இணைப்பு கொடுத்து, பணிகள் நிறைவேற்றப்படுமானால் ஏறத்தாழ 20,000 மக்களுக்கு குடிநீர் திட்டம் நிறைவேற வாய்ப்பு இருக்கிறது. இதை உடனடியாகத் தீவிரப்படுத்தி, குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இதுபற்றி பரிசீலனை செய்யப்படும்.

பொள்ளாச்சி தாலுகாவில் தனி நபர்களால் கட்டப்பெற்றுள்ள அணைகள்.

*வினா எண் 562—திரு. எம். வி. இரத்தினம் : மாண்புமிகு தீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி தாலூகாவில் உள்ள தேவனூர் ஆறு, ஆலாங்கடவு ஆறுகளில் எத்தனை தனி நபர்கள் அணைகள் கட்டியுள்ளார்கள் ?

(ஆ) அதில் அரசுக்கு வரும் வருவாய் எவ்வளவு ?

(இ) மேற்படி அணைகளை அரசு எடுத்துக்கொள்ள முன்வருமா ?

(ஈ) P. A. P. கழிவுநீர் மேற்படி ஆறுகளில் சேருகிறதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) பொள்ளாச்சி தாலூகாவில் தேவனூர் பள்ளத்திற்கு குறுக்கே எட்டு மண் கொரம்புகளும், ஐந்து அணைக்கட்டுகளும், ஆலாங்கடவு பள்ளத்திற்கு குறுக்கே 21 மண் கொரம்புகளும், ஆறு அணைக்கட்டுகளும் உள்ளன.

(ஆ) தண்டத் தீர்வையோடு ஏறக்குறைய ஆண்டொன்றுக்கு ரூ. 34,000 அரசுக்கு வருவாய் கிடைப்பதாக சம்பந்தப்பட்ட வருவாய் ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

(இ) இது குறித்து அரசு தனியாக பரிசீலித்து முடிவெடுக்கும்.

(ஈ) ஆம்.

திரு. கோவைத்தம்பி : தலைவரவர்களே இந்த பொள்ளாச்சி தாலூகாவில் தனிப்பட்ட நபர்கள் கட்டிய அணைகள் மூலம் எவ்வளவு ஏக்கர் தண்ணீர் பாய்கிறது ? அரசுக்கு செலுத்துகின்ற தீர்வைக்குரிய கட்டணம் இந்த தனியார்கள் அணைகளிலிருந்து வசூலிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, அதைத்தான் என்னுடைய பதிலிலே தெரிவித்திருக்கிறேன். மொத்தம் 34,000 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு தண்டத் தீர்வையாக வசூல் செய்யப்படுகிறது. இதை அரசு எடுத்துக்கொள்வது பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

சின்னவேடப்பட்டியில் அமைக்கப்படவுள்ள குளம்.

*வினா எண் 563—திரு. கு. ரமணி—மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் சர்க்கார் சாமக்குளம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த சின்னவேடப்பட்டி கிராமத்தில் 400 ஏக்கர் பூமியில் ஒரு பெரிய குளத்தை அமைக்க நடைபெற்று வந்த ஆய்வுப்பணி முடிந்து விட்டதா ?

(ஆ) ஆம் எனில், குளத்தை அமைக்கும் வேலை எப்பொழுது ஆரம்பமாகும் ?